செ.வெ.எண்.39 நாள்.17.04.2017.

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 202 பயனாளிகளுக்கு ரூ.107.80 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், கருணை அடிப்படையில் இரண்டு நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.**

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.04.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கடல் கடந்த இந்தியருக்கான இழப்பீட்டு தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், ஓமன் நாடு, மஸ்கட்டில் பணியில் இருக்கும் போது விபத்தில் காலமான திரு.சரவணன் என்பவரின் வாரிசுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.25,13,822/—ஐ அன்னாரி மனைவி திருமதி.இந்துராணிக்கு ரூ.8,37,,942/—ம், மகள்கள் செல்வி.வேல்விழிக்கு ரூ.8,37,940/—ம், செல்வி.ஹரிணிக்கு ரூ.8,37,940/—ம், அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் 33 குழந்தைகளுக்கு சக்கர நாற்காலிகளும், 42 குழந்தைகளுக்கு காதொலி கருவிகளையும், 44 குழந்தைகளுக்கு சக்கரத்துடன் கூடிய நடை வண்டிகளையும், 38 குழந்தைகளுக்கு தொடுவுணர்வு சார்ந்த கருவிகளையும் ஆக மொத்தம் 157 மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு ரூ.5,94,500/— மதிப்பிலான உபகரணங்களையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், திருவேங்கட வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவினையும், சேரன்மகாதேவி வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு மாற்றுத்திறனாளி உதவித் தொகை பெறுவதற்கான ஆணையினையும், பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 2 நபர்களுக்கு இந்திராகாந்தி தேசிய விதவை உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், வீரகேரளம்புதூர் வட்டத்தைச் சார்ந்த 6 நபர்களுக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித் தொகை மற்றும் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தீருதவி உதவித் தொகையாக 2 நபர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலைகளையும், ஒரு நபருக்கு ரூ.25 ஆயிரத்திற்கான காசோலையினையும், 4 நபர்களுக்கு ரூ.15 ஆயிரத்திற்கான காசோலைகளையும், இராதாபுரம் வட்டம், வடக்கு வள்ளியூரைச் சார்ந்த 25 நபர்களுக்கு ரூ.72.87 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டுனைப் பட்டாக்களையும் ஆக மொத்தம் 202 நபர்களுக்கு ரூ.1,07,79,822/— மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து காலமான திரு.பெ.இசக்கி என்பவரின் வாரிசான மகள் செல்வி.ஐயம்மாள் என்ற சங்கரிக்கு கருணை அடிப்படையில் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலர்-II பணிபுரிவதற்கான ஆணையினையும், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலர்-II ஆக பணிபுரிந்து காலமான திரு.பி.முருகையா என்பவரின் வாரிசு மனைவி திருமதி.எஸ்.முத்துமாரிக்கு கருணை அடிப்படையில் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலர்-II பணிபுரிவதற்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பெற்று, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.ஆர்.விஜயலெட்சுமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.எஸ். நிர்மலா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்தியநாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி பிரிவு) திரு.தண்டபாணி, சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் (திருவேங்கடம்) திரு.சங்கர், (பாளையங்கோட்டை) திருமதி.செலின் கலைச்செல்வி, (வீரகேரளம்புதூர்) திரு.சு.பத்மநாபன் திருமதி.கிருஷ்ணவேணி, (சங்கரன்கோவில்) திரு.ஆர்.முருகன் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.